விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 237 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 28 புதன்கிழமை (13.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உயிர்த்த ஞாயிறு

## சூத்திரதாரிகளை மறைக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை மறைக்க எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில் 40 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறைப் பகுதியில் சுமார் 40 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா போதைப்பொருள் நிலத்திற்கு கீழ் பதுக்கி வைக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று மீட் கப்பட்டுள்ளன.

ஊர்காவற்துறை கடற்கரைப் பகுதியில் நிலத்

15ஆம் பக்கம் பார்க்க

## தொண்டைமானாறில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கடல் நீர் ஏரியிலிருந்து நேற்று மாலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கைக்கு வந்த மீனவர்கள் சடலம் ஒன்று மிதந்து கொண்டு இருப்பதைக் கண்டு அவசர தொலைபேசி இலக்கத் துக்கு தகவல்

15ஆம் பக்கம் பார்க்க




யாழ்.மட்டுவிலில் அமைந்துள்ள

## பொருளாதார மத்திய நிலையம் அடுத்த மாத இறுதிக்குள் ஆரம்பம்



### வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை அடுத்த

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலை செயற்திட்ட கட்டுமானப் பணிகளுக்குத் தடை

### மன்னார் நீதிமன்றம் உத்தரவு

(மன்னார்)

மன்னார் காற்றாலை செயற்திட்ட கட்டுமானப் பணிகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்று வரும் காற்றாலை இரண்டாம் கட்ட செயற்திட்டத்துக்கு எதிராக மன் னார் மாவட்டம்

02ஆம் பக்கம் பார்க்க

எழுதுமட்டுவாளில்

## இ.போ.ச மோதி பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாளில் இலங்கை போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான பேருந்து மோதி யதில் பெண்

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய

அரசமைப்புப் பேரவை அனுமதி

(கொழும்பு)



இலங்கையின் 37 ஆவது பொலிஸ்மா அதி பராக தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர்

15ஆம் பக்கம் பார்க்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் ...

மாத்திரம் இல்லாமல் பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்சியாகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், காற்றாலை செயற்திட்டத்தின் கட்டுமான பணிகள் எவையும் இனி இடம்பெறாது என மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு பொலிஸார் உத்தர வாதம் ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

வழங்கிய உத்தரவாதத்திற்கு அமைவாக தற்போது மன்னார் எல்லையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள காற்றாலை பாகங்களை மாத்திரம் மன்னார் மாவட்டத்துக்குள் அனுமதிக்க மன்னார் நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மன்னார் பொலிஸாரால் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் போராட்டகாரர்களுக்கு எதிராக தடை உத்தரவு பெறும் நோக்கில் தொடுக்கப்பட்ட வழக்கின் போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்று அதிகாலை காற்றாலை உதிரிப்பாகங்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை போராட்டகாரர்கள் தடுத்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து பொலிஸார் நீதிமன்றத்தில் சில போராட்டக்காரர்களுக்கு எதிராக தடையுத்தரவை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டம் எந்த வகையிலும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தவில்லை என்றும் இது ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற போராட்டம் என்ற அடிப்படையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் மேற்கொண்ட சமர்ப்பணத்தின் அடிப்படையில் போராட்டகாரர்களுக்கு எதிராகவோ போராட்டத்துக்கு எதிராகவோ அவ்வாறான எந்த கட்டளையும் நீதிமன்றம் பிறப்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-7,285)

---

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



யா/யூனியன் கல்லூரியின்
கல்விசாரா உத்தியோகத்தர்
பணியிலிருந்து 13.08.2025
இன்று ஓய்வுபெறும்

## கந்தசாமி விஜயஜீவன்

அவர்களது பணிநயந்து
பாராட்டி வாழ்த்துவதோடு
அகவை அறுபதில்
தடம் பதிக்கும் அவர்களின்
ஓய்வுக்காலம் சிறக்கவும்
வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

Best Wishes

### சேவை விபரம்

05.05.1987 – யாழ்.நடேஸ்வராக் கல்லூரி பகல் நிவாரணக் காவலாளி
01.02.1989 – இரவுக் காவலாளி
15.01.1992 – நிரந்தர நியமனம் தரம் III தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்
11.02.1998 – மானிப்பாய் இந்துக் கல்லூரி தரம் II அலவலகப் பணியாளர் பதவியுயர்வு கிடைத்து இனுவில் மத்திய கல்லூரி – 3 வருடம்
09.04.2007 – வவுனியா கல்வி வலயம்
01.01.2008 – வவுனியா கோமரசன் மகா வித்தியாலயம்
15.02.2010 – வவுனியா தெற்கு வலயம்
29.04.2013 – தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்
16.06.2017 – வலிகாமம் கல்வி வலயம்
2019 – 07 வரை உடுவில் கோட்டம்
26.08.2019 – யூனியன் கல்லூரி

13.08.2025 (C-3639)

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## வேதநாயகம் கணேந்திரன்

யா/யூனியன் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியராகப்
பணி புரிந்து அண்மையில் இலங்கைக் கல்வியியலாளர்
சேவை (SLTES - III) நியமனம் பெற்று மாங்குளம்
ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தில்
ஆசிரியக் கல்வியியலாளராகப் பதவி
ஏற்றிருக்கும் திரு.வேதநாயகம் கணேந்திரன் அவர்களைப்
பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பணி உயர்வுகளை
தனதாக்கிட வாழ்த்துகின்றோம்.

13.08.2025 (C-3641)

ஆசிரியர் – ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை

---

# மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை காணிகள் 2025ஆம் ஆண்டிற்கான காலபோக செய்கைக்கு மட்டும் குத்தகைக்கு விடப்பட உள்ளது

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழும், புதுமுறிப்பு குளத்தின் கீழும், பூநகரி நல்லூர் பகுதியிலும் எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்புக்களுள் உள்ள பயிர்ச்செய்கை காணிகள் 2025ஆம் ஆண்டு காலபோக செய்கைக்கு மட்டும் எதிர்வரும் 23.08.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் ஜெயந்தி நகரில் A9 வீதிக்கு மேற்குப்புற பகுதியில் அமைந்துள்ள பயிர்ச்செய்கை காணிகளும், மதியம் 03 மணிக்கு கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலகம் அருகாமையில் A9 வீதிக்கு கிழக்குப்புறமாக உள்ள பயிர்ச்செய்கை காணிகளும் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாய பெருமக்களாகிய தாங்கள் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகையினைக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு :** பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவு செய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத்தொகையினை முழுமையாக அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு ஏல விற்பனை தொடர்பில் எமது ஏல விற்பனைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**காணிகள் விபரம்**

| இல. | காணி விபரம் | அளவு | ஏல விற்பனை நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | உருத்திரபுரம் 09ஆம் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 04 ஏக்கர் | மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் | காலை 9.00 Am |
| 02 | புதுமுறிப்பு சிவநகர் கமக்கார அமைப்பின் கீருள்ள வயல் | 10 ஏக்கர் | | |
| 03 | பூநகரி நல்லூர் வயல் | 03 ஏக்கர் | | |
| 04 | பூநகரி சாமிப்புலம் வயல் | 06 ஏக்கர் | | |
| 05 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் நாகபூசணி வயல் | 20 ஏக்கர் | கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலகம் அருகாமை | பி.ப 3.00 Pm |
| 06 | முரசுமோட்டை கமக்கார அமைப்பின் கீழ் முரசுமோட்டை | 26 ஏக்கர் | | |
| 07 | வயல் திருவையாறு மகிழங்காடு கமக்கார | 26 ஏக்கர் | | |
| 08 | அமைப்பின் கீழ் உலாந்தா கமம் திருவைாறு மகிழங்காடு கமக்கார | 10 ஏக்கர் | | |

அமைப்பின் கீழுள்ள வயல்

**தொடர்பு முகவரி**
**ச.மோகனபவன்,**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.** (C-3633)

**தொலைபேசி இலக்கம்:**
0773240950/0214923118

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சித்திரபாட
ஆசிரியை திருமதி அலெக்ஸ் பெனடிற்
றெகன்சியா ஞானவதனி
அவர்களின் அன்புத் தாயார் (C-3634)

## அமரர் திருஞானம் தவமணி (மேரி)

அவர்களின் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினருக்கும்
உறவுகளுக்கும் எமது
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 12.07.1943
மறைவு 12.08.2025

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை ம.வி


---

வலம்புரி விளம்பரத்திற்கு தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

---

# 12ம் ஆண்டு நினைவஞ்சலி

## சண்முகநாதன் பிரசாத்



தோற்றம் 05.11.1993
மறைவு 27.07.2013

எங்கள் செல்வமே பிரசாத்
இன்றுடன் ஆண்டுகள் பன்னிரண்டு
முடிவடைந்த போதிலும் நீ எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாய்
முகில் எப்படி நில்லாது ஓடிக்கொண்டே
இருப்பது போல் நீ நம்முடன் 19 ஆண்டுகள்
வாழ்ந்த நினைவுகள் நிழல் படம் போல்
ஓடிக்கொண்டே இருக்கிறது
எங்கள் நெஞ்சங்களில் அலைகள் ஓய்வதுமில்லை
உன் நினைவுகளும் ஓய்வதுமில்லை
நாம் இறைவனடி சேரும் போது
உன்னுடன் நிச்சயம் ஒன்று சேர்வோம்
அதுவரை உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
சிறியதாய் (சோதிமலர்)


(C-3635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி விவகாரம்;
# நீதிகோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)..............................................

**யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதிகோரி தமிழகத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



கோவை பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு கடந்த 9 ஆம் திகதி இந்த போராட்டம் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

செம்மணி மனித புதைகுழியில் கடந்த 5ஆம் திகதி அகழ்வு பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், சிறுவர்கள், குழந்தைகள், உள்ளிட்ட 133 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 147 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 62,000 பேர் அரச சேவைக்கு

(கொழும்பு)

அரச சேவைக்கு 62,000 பேரை இணைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெறும் 2025 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக பட்டதாரிகள் நியமனம் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் பட்டதாரிகள் பலர் பல இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது அரச சேவை நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி)

## தாய்மையடையும் சிறுமிகள் அதிகரிப்பு- புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் பதின்ம வயதைச் சேர்ந்த 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வருடாந்தம் வெளியிடும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புள்ளி விபரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 53 சிறுமிகள் கர்ப்பம் தரித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்கு முறையான பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (நி)

## முன்னாள் முதலமைச்சர்கள் மூவர் விசாரணை வலயத்தில்

(கொழும்பு)

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, மூன்று முன்னாள் முதலமைச்சர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்ன ஆகியோருக்கு எதிராக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முன்னாள் முதலமைச்சர்களுக்கு எதிராக அவர்களின் சட்டவிரோத வருவாய் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு, கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விசாரணைப் பிரிவுகள் தெரிவிக்கின்றன. (நி)

# பேருந்து - டிப்பர் நேருக்கு நேர் மோதல்




(கொழும்பு)

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியின் மின்னேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டு ஓயா பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தானது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பட்டுஓயா பாலத்திற்கு அருகே இடம்பெற்றுள்ளதாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுருஓயாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று, எதிர்திசையில் வந்த டிப்பர் லொறியுடன் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலன்னறுவை, மின்னேரியா மற்றும் ஹிங்கு ராக்கொடை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம் குறித்து மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



இன்றைய தினம் [13.08.2025] மணிவிழா கொண்டாடும் யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியை

திருமதி. முரளி கலாவதி

அவர்கள் ஆசிரியர் சேவையில் 37 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் ஆரோக்கியமானதாகவும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்
- யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி 21.10.1988 –29.10.1991
- யா/புங்குடுதீவு மத்திய கல்லூரி 01.11.1991 – 02.12.1993
- திருகோணமலை மெதடிஸ்த கல்லூரி 05.01.1996–10.06.1997
- வவு/செட்டிக்குளம் மகாவித்தியாலயம் 15.06.1997 –18.04.1998
- வவுனியா நொச்சிக்குளம் R.C.T.M.S 27.04.1998 – 05.09.2000
- யா/அனலைதீவு சதாசிவ M.V 22.09.2000 –07.01.2004
- யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 08.01.2004 –15.02.2015
- யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் 16.02.2015 –12.08.2025

Best Wishes

(4993)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 14.07.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (ஜெயா)

(பிரபல வர்த்தகர், தொழிலதிபர், பிரான்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 13.08.2025 புதன்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 16.08.2025 சனிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் மயிலிட்டியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

தகவல்:

மயிலிட்டி (5024) குடும்பத்தினர்

## மாகாண மட்ட குத்துச்சண்டைப் போட்டி; சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு தங்கம்



வட மாகாண பாடசாலைகளுக் கிடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

வட மாகாண பாடசாலைகளுக் கிடையிலான மாகாண மட்ட குத்துச் சண்டைப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத் தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடை பெற்றது.

இக் குத்துச்சண்டைப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ரு.சுலக்சன் 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 44-46 கிலோகிராம் எடைப்பிரிவில் முதலாமிடத்தையும் ரா.விசாலகன் 20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 46-49 கிலோகிராம் எடைப் பிரிவில் முதலாமிடத்தையும் பெற்று இருவரும் தங்கப்பதக்கத்தை கைப் பற்றியுள்ளனர்.

அத்துடன் 20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 46-49 கிலோகிராம் எடைப்பிரிவில் உ.அனைக்ஸ் மூன்றாமிடத்தையும் அதே 20 வயதுப் பிரிவினருக்கான 50-60 கிலோகிராம் எடைப்பிரிவில் ர.றொசினோ வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர். (3-104)




கொழும்பு சென்.பெனடிக்ட் கல்லூரியின் இரண்டாம் தர மாணவரான தி.தினேஷ் ஹெதாவ், நீச்சல் போட்டியில் 50 மீற்றர் தூரத்தை 49 வினாடிகளில் கடந்து சோழன் உலக சாதனைப் புத் தகத்தில் இடம்பிடித்துள்ளார்.



முல்லைத்தீவு பாண்டியன்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்-யதுபாஸ்கர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

## உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு



(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அரசாங்கத்தின் திட்டம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எக்ஸ் பதிவொன்றில் அவர் பதிவிட்டுள்ளதாவது,

சுற்றுலாத் துறையில் ஆயிரக்கணக்கான சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் வாடகை வாகன ஓட்டுநர்கள் உள்ளனர்.

எனவே, அரசாங்கத்தின் இந்த முடிவு முறையான ஆலோசனை இல்லாமல் செயற்படுத்தப்பட்டால் அவர்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்குள்ளாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களை, இலங்கையில் வாகனம் செலுத்த அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தம் இலங்கையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

எனினும், இந்த திட்டம் அவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும். சுற்றுலா தொழில்துறையில் உள்ள பலரிடமிருந்து தனக்கு பல முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும், இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்பு கவனமாக பரிசீலிக்குமாறு நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். (நி)

லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

UK-1350, Australia-2050, Canada-2550,
India-1490, Germany-1990, Italy-2250,
Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

(0431)

# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள பாடசாலை | பாடசாலை வகை | விண்ணப்பங்கள் கோரும் அதிபர் தரம் |
|---|---|---|---|
| 01 | மா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை | III | III |
| 02 | யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம் | III | III |
| 03 | யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை | III | III |
| 04 | யா/இருபாலை சி.சி.த.க. பாடசாலை | III | III |
| 05 | யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை. | II | II |
| 06 | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் | II | II |
| 07 | யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை | III | III |
| 08 | யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை | II | II |

தகைமைகள்

- வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** மற்றும் **தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம் III** அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு

- எம்மால் வலம்புரி பத்திரிகையில் 2025.08.06 ஆம் திகதி கோரப்பட்டிருந்த "அதிபர் பதவி வெற்றிடங்கள்" தொடர்பான விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், அக்குறித்த விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் 2025.08.13 ஆம் திகதிய இவ்விளம்பரத்திற்கமைய விண்ணப்பிப்பதாயின் மீளவும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக **2025.08.29** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் 2025(III)"** எனக் குறிப்பிடவும்.

**மாலதி முகுந்தன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(இ)

# இராசிபலன்

13.08.2025
ஆடி 28, புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.42 மணி வரை

உத்தரட்டாதி பிற்பகல் 1.13 மணிவரை
சுப நேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்.

**வளவன்**

**மேஷம்** குடும்ப தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வெளியூர்ப் பயணமொன்று இடம்பெறும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்களில் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி** விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** போட்டிகளைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள், பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மகரம்** வழிபாடு சிறப்பினைத் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் எளிதில் கைகூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் , குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் , போசன சுகமுண்டு.

**அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் "யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா (2025)" எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேகப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் உள்நாட்டிலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-33)

# 'கனா' நினைவு நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

வவுனியா, ஓமந்தையில் கடந்த மே மாதம் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி உயிரிழந்த யாழ். இந்தியத் துணைத் தூதரக உத்தியோகத்தர் ச.பிரபாகரசர்மா மற்றும் அவரது மகன் பி.அக்ஷயசர்மா ஆகியோரது நினைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் அவர்கள் இருவரதும் நினைவாக கலாநிதி பிரபாகரசர்மா சீதாலட்சுமி தொகுத்த "கனா" நினைவு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நூலை கலாநிதி சீதாலட்சுமி பிரபாகர சர்மா வெளியீடு செய்ய முதற் பிரதியை யாழ். இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் இடம் பெற்றன.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீ சற்குணராஜா, செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் என். சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-33)




## கா! நல்லைக் குமரேசனே!

மறைஞான முறைந்தாளும் நிறைவான மாநகரில்
முறையாய் அமர்ந்தவிறையே!
குறைவின்றி யடியார்கள் கொண்டவினை யண்டாமல்
கும்பிடும் காட்சிகண்டே
அறைகூவி வேலோடு அறங்காக்க வந்திங்கு
அல்லல்களை நீக்கியருள்வாய்
இறைவனுக் கிறைவனே! யெத்திசையும் சக்திமிகும்
இன்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## தங்கவேலா நின் திருவடியே தஞ்சமப்பா

நல்லடியார் வணங்கும் நல்லூரா போற்றி
நாமமது மேலோங்கும் கதிர்வேலா போற்றி
முடிதரித்த மாயவன்தன் மடியிருந்தாய் போற்றி
மூதறிஞர் முனிவர்கள் மனதிருந்தாய் போற்றி
துடியிடை மாதிருவர் கொழுந்தனே போற்றி
துடித்திடு வேல்கையில் தாங்கியவனே போற்றி
நாடிவரும் சூரனை வதைத்தவனே போற்றி
நல்ல மயில்வாகனனாய் ஜொலித்தவனே போற்றி
பாடி வரும் பாமாலை சூடினாய் போற்றி
பாவியையும் பக்கத்தே ஈர்ப்பாய் போற்றி
ஆடி வரும் பக்தர்களை அணைப்பாய் போற்றி
அல்லும் பகலு முந்தன் திருவடியே தஞ்சமப்பா!

கலாபூசணம் மு.தணிகாசலம்,
கற்கோவளம்.

## பதில் சொல்லையா பாலமுருகனே

நானிலமும் காத்திடும் நல்லைக் கந்தா
நம்மவர் நிலை கண்டு மௌனம் ஏன்
புதைகுழியில் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கு
சாட்சி யார்
கந்தபுராணக் கலாசாரம் கதிகலங்கி நிற்க
காரணம் என்ன
ஆறாண்டுக்கு ஒரு முறை மாறும் அரசியலில்
வாக்குறுதிகளுக்கு மட்டும் பகடக்காயாகும்
எம் அரசியல் கைதிகளின் நிலை தான் என்ன
மாறிவரும் உலகில் மாறாத வண்ணமாய்
அந்த வெள்ளைவேட்டி அரசியலில்
சாயம் வெளுப்பது எப்போது
தீர்வின்றி தொடரும் தீர்வுக்கு திட்டம் தான் என்ன

கஜரூபன் கஜானி,
வராகி அம்மன் கோவிலடி,
கொக்குவில்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 160 | 200 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 340 | 250 | 300 | 400 |
| கரட் | 520 | 600 | 600 | 600 | 800 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 400 |
| புடோல் | 100 | 100 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 220 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 80 | 150 | 120 | 200 |
| கறிமிளகாய் | 400 | 400 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 700 | 700 | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழா வும் 4 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.20 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இசையரங்கு நிகழ்வில் பாட்டு-கலாநிதி செல்வி.சியா மளாங்கி கருணாகரன், வயலின்-திருமதி. சுவர்ணாங்கி சுகந்தன், மிருதங்கம்-ம.லோகேந்திரன், முகர்சிங்-ஆ.மோகனப் பிரசாத் ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள நடன அரங்கு நிகழ்வில் நடனம்-சிவபூமி மனவிருத்திப் பாட சாலை மாணவர்கள், நட்டு வாங்கம்-திருமதி.கேதுஷா கமலகுமார், பாட்டு-கு.அனுஷன் மற்றும் திருமதி. உமாசங்கர் புஸ்பலக்ஷ்மி, மிருதங்கம்-ம.லோகேந்திரன், வயலின்-இ.நிறோசன் ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில்
## காற்றாலை கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்கள் பொலிஸ் பாதுகாப்புடன் ஏற்றி வரப்பட்டன
## மக்கள் எதிர்ப்பு!

(மன்னார்)

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் திட்டத்திற்கான காற்றாலை கோபுரங்கள் அமைப்பதற்கான பாரிய பொருட்கள் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் ஏற்றி வரப்பட்டு கொண்டிருந்த நிலையில் மக்களின் எதிர்ப்பால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது மக்கள் பொது அமைப்பினர் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்,உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளடங்கலாக இந்த போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் குறித்த வாகனத்தை மன்னார் நகருக்குள் கொண்டு செல்ல முயற்சித்த போதும் மக்களின் பலத்த எதிர்ப்பினால் இந்த வாகனம் கொண்டு செல்ல முடியவில்லை .

தொடர்ந்தும் மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் குறித்த காற்றாலைக்கான உதிரி பாகங்களை ஏற்றிவந்த பாரிய வாகனம் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நீதிமன்ற பிரதான வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (8-285)

# கிளிநொச்சி நகர அபிவிருத்திக்கு இரு தரப்பும் இணக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரின் மையப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற வர்த்தக நிலையங்கள் மற்றும் சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பில், கிளிநொச்சி நகர வர்த்தகர்களுக்கும் கரைச்சி பிரதேச சபையினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்நிலைகளுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற இருதரப்பு கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சபைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்திய விதத்தில் வர்த்தகர்களிடையே ஏற்பட்ட அதிருப்தி, அதனால் நிலவிய குழப்பநிலை என்பவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினருடனான கலந்துரையாடல் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, சபையின் சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளக் கூடிய பாதிப்புகளை தவிர்க்கும் வகையில், எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிவரை வர்த்தகர்களுக்கு கால அவகாசம் வழங்குமாறு வர்த்தக சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் குறித்த விடயத்தில் இருதரப்பினரிடையேயும் இணக்கம் எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டார் வர்த்தக அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

யாழ் - மட்டுவில் பகுதியில் அமைக்கப்பட்டு இயங்காது உள்ள பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

மட்டுவில் பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 திகதி அன்று அன்றைய பிரதமர் மகிந்தராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் எந்தவொரு வர்த்தக செயற்பாடும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேரில் சென்று பார்வையிட்டதுடன் இயங்கச் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இவ் விஜயத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தென்மராட்சி பிரதேச செயலாளர், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் விஜயத்தை தொடர்ந்து யாழ் மாவட்ட செயலகத்தில் பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாகவும், கூட்டுறவு வங்கி தொடர்பாகவும் அமைச்சர் தலைமையில் அதிகாரிகளுடன் கலந்துரையாடலும் இடம்பெற்றது. (8-33)

# மணல் கடத்தல்காரர்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(அராலி)

யாழ்ப்பாண வடமராட்சி கிழக்கு மற்றும் பச்சிலைப் பள்ளி மக்களின் பிரதான போக்குவரத்து பாதையாகக் காணப்படும் மருதங்கேணி புதுக்காட்டு பிரதான வீதியில் மணல்கடத்தல்காரர்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மணல் கடத்தல் நடவடிக்கை குறித்த வீதியூடாக இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் மழையின் போதும் மணல் கடத்தல் இடம்பெற்றதை அறிந்த மக்கள் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கினார்.

அதனை அடுத்து மருதங்கேணி புதுக்காட்டுப் பகுதியை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் முற்றுகையிட்டனர்.

அதனை அறிந்த மணல் கடத்தல்காரர்கள் மணலை வீதியோரங்களில் பறித்து விட்டுச் சென்றுள்ளனர்.

சுமார் 3 டிப்பர்களுக்கு அதிகமான மணல் வீதியோரங்களில் பரவிக் காணப்பட்டது. இதனால் சில விபத்துக்களும் இடம்பெற்றதாக மக்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து வீதியோரங்களில் காணப்பட்ட மணலை அகற்றும் நடவடிக்கையினை கிளிநொச்சி வீதி அதிகார சபைக் குழுவினர் மேற்கொண்டனர். (8-104)

# கேரளக் கஞ்சா மீட்பு!



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டி-அறுகுவெளி காட்டுப் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை 7 கோடி ரூபாய் பெறுமதியான 284 கிலோ கேரளக் கஞ்சா போதைப்பொருட்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

126 பொட்டலங்களாக பொதி செய்யப்பட்ட 284 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளே இதன்போது கைப்பற்றப்பட்டுள் ளன. அத்துடன் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடல் வழியாக பாதுகாப்பாக எடுத்துவரப்பட்ட கஞ்சாப் பொதிகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-30-104)

# வேலணை மக்களிடம் சிக்கிய கால்நடை திருட்டுக்கும்பல்!

(அராலி)

வேலணை பிரதேசத்தில் கால்நடைப் பண்ணையாளர்களின் வளர்ப்பு கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற இடங்களுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு சென்று விற்பனை செய்துவந்த திருட்டுக் கும்பலில் ஒருவர் வேல்ணை வங்களாவடியில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து தெரிய வருகையில்,

வேலணை பிரதேசத்தில் அண்மைக் காலமாக பெறுமதிமிக்க வளர்ப்புக் கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்பையும் சந்தித்து வரும் நிலை காணப்பட்டது.

இதேநேரம் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைபாடுகள் செய்தும் திட்டமிட்ட இந்த திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் பெரும் சவால் இருந்து வந்தது. இதையடுத்து பொதுமக்கள் தமது கால்நடைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேலணைக்கு வரும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் கண்காணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை பட்டா ரக வாகனம் ஒன்றில் 5 பேரடங்கிய திருட்டுக் கும்பல் ஒன்று வங்களாவடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த மக்கள் குறித்த நபர்களை பிடிக்க முயன்ற போது அவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர்.

நிலைமையை சுதாகரித்துக்கொண்ட மக்கள், பட்டா ரக வாகனத்தை மறித்து அதில் இருந்த ஒருவரையும் இறைச்சியாக்கப்பட்ட மாட்டுடன் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஏனைய நால்வர் தப்பியோடிய நிலையில் பொலிஸார் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (8-104-33)

# மன்னார் காற்றாலை மின்திட்டம் ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடல்

(வவுனியா)

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மற்றும் இல்மனைட் அகழ்வுக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் இன்றைய தினம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்துள்ளதாக ஜ.ஜெகதீஸ்வரன் எம்.பி தெரிவித்தார். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 50 ஆண்டுகளின் பின் பிரான்ஸில் பாரிய காட்டுத்தீ



(பாரிஸ்)
பிரான்ஸின் தெற்கு மற்றும் தென்-மேற்கு பகுதிகளில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான காட்டுத்தீ பரவி வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸில் அண்மைக் காலமாக நீடித்து வரும் கடும் வெப்பநிலை, நீண்ட கால வறட்சி மற்றும் பலத்த காற்று காரணமாக தீ வேகமாகப் பரவி வருகின்றது.

இதனால் ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் காடுகள், விவசாய நிலங்கள் மற்றும் வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

அதே சமயம் ஆயிரக்கணக்கான மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேநேரத்தில், கிரீஸ், இத்தாலி, போர்த்துக்கல் உள்ளிட்ட நாடுகளிலும் காட்டுத்தீ பரவி வருவதால், தென் ஐரோப்பா முழுவதும் அவசரநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நிபுணர்கள், காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்த வெப்பநிலை இந்த பேரழிவுக்கு முக்கிய காரணம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பலுசிஸ்தான் விடுதலைப்படை பயங்கரவாத அமைப்பு

### அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)
பலுசிஸ்தான் விடுதலைப் படை, மஜீத் படைப் பிரிவைப் பயங்கரவாத அமைப்புகள் என்று அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கனிம வளம் நிறைந்த மலைகள் கொண்டது பலுசிஸ்தான் மாகாணம். இதைத் தங்களின் தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி பலுசிஸ்தான் விடுதலைப் படை அந் நாட்டுக்கு எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

2024ஆம் ஆண்டு பாகிஸ்மான் கராச்சி விமான நிலையம், குவெட்டா ஆகிய இடங்களில் பலுசிஸ்தான் விடுதலைப் படை தற்கொலைப் படை தாக்குதல் நடத்தியது.

இது தவிர குறிப்பிட்ட இடைவெளியில் பாகிஸ்தான் இராணுவத்திடமும் சண்டையிட்டு வருகிறது.

இந் நிலையில் தொடர் வன்முறை தாக்குதல்களை அடுத்து, பலுசிஸ்தான் விடுதலைப் படை மற்றும் அதன் மற்றொரு பெயரான மஜீத் படைப்பிரிவை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அதிகாரப் பூர்வமாக அறிவித்து இருக்கிறது.

அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இந்த அறிவிப்பை செய்திக்குறிப்பு மூலம் வெளியிட்டு உள்ளார். (நி)

## ஒன்றுடன் ஒன்று மோதிய சீன இராணுவக் கப்பல்கள்



(பீஜிங்)
தென் சீனக் கடலில் ஸ்கார்பாரோ ஷோல் பகுதியில் திங்களன்று பிலிப்பைன்ஸ் ரோந்துப் படகைத் துரத்தும்போது சீனக் கடற்படை மற்றும் சீன கடலோர காவற்படை கப்பல்கள் மோதி விபத்துக்குள்ளாகின.


தென் சீனக் கடல் உலகின் மிகவும் பரபரப்பான கடற்பாதையாகும்.

இதன் மூலம் 60% இற்கும் அதிகமான வர்த்தகம் நடைபெறுகிறது.

இதில் ஏற்பட்ட பலத்த சேதத்தால் சீனாவுக்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் வீடியோ காட்சிகளை பிலிப்பைன்ஸ் கடலோர காவற்படை வெளியிட்டுள்ளது. (நி)

## 97 சிகரங்களுக்கான ஏறுதல் கட்டணங்களை தள்ளுபடி செய்த நேபாளம்



(காத்மண்டு)
நேபாளத்தில், அதிகம் அறியப்படாத மலைப் பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முயற்சியாக, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு 97 இமயமலை சிகரங்களை இலவசமாக ஏற நேபாளம் அனுமதிக்கும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த முயற்சி நேபாளத்தின் மிகவும் தொலைதூர மற்றும் வளர்ச்சியடையாத இரண்டு மாகாணங்களான

ஜம்மு
தொடர்
தானுட
தது.
சிந்து
நிறுத்தி
தலைவ
தொடர்
இரு
பதற்றம்
கர்னால
மலைக
கொண்
5.970
உள்ள
இந்த
புகளை
பொருள
என்று
பணிப்
தெரிவித்
கிட்ட
முறைய
அனும
நிலைய
ளது.
ஏப்ர
மலை
இருந்த
கும்.
செப்
மாதங்
அல்லா
செலவா
டிசம்
$3.750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# மீண்டும் இந்தியாவை சீண்டும் பாகிஸ்தான்!

**(இஸ்லாமாபாத்)** ▪▪▪▪▪▪▪▪▪▪▪

**பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரக அலுவலக ஊழியர்களுக்கான எரிவாயு, குடிநீர் உள்ளிட்டவை நிறுத்தப்பட்டிருப்பது, மீண்டும் பதற்றத்திற்கு வழிவகுத்துள்ளது.**



ஜம்மு - காஷ்மீர் தாக்குதலைத் தொடர்ந்து அண்டை நாடான பாகிஸ்தானுடனான உறவு மோசமடைந்து.

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தையும் இந்தியா றுத்தி வைத்தது. பின்னர், பாகிஸ்தான், லைவர்கள் போர் நிறுத்தம் கோரியதைத் தாடர்ந்து மோதல் முடிவுக்கு வந்தது.

இரு நாடுகள் இடையே ஓரளவு நற்றம் தணிந்த நிலையில், மீண்டும் இந்தியாவைச் சீண்டும் விதமாக பாகிஸ்தான், அரசு நடந்து வருகிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக அலுவலக ஊழியர்களுக்கான அடிப்படை வசதிகளில் பாகிஸ்தான் கை வைத்துள்ளது.

அவர்களுக்கு வழாங்கப்பட்டு வந்த பைப் லைன் காஸ் நிறுத்தியதோடு, சமையல் சிலிண்டர்களையும் விநியோகிக்கக் கூடாது என எச்சரித்துள்ளது.

இத்துடன், சுத்தமான குடிநீர், செய்தித்தாள் விநியோகம் போன்றவற்றையும் தடுத்துள்ளது.

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா உறுதியாக அமுல்படுத்தியதைத் தொடர்ந்து, அந்நாட்டு உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தூண்டுதலின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள், தூதரகங்களின் சீரான செயற்பாடு, ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் கண்ணியத்தை உறுதிசெய்யும் வியன்னா உடன்படிக்கை விதிகளை மீறும் வகையில் இருப்பதாக இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்லாமல், இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்கனவே பலவீனமாக உள்ள உறவை மேலும் சிதைப்பதாகவும் கண்டித்துள்ளது. (நி)

---

ரனாலி மற்றும் சுதுர்பாசிமில் உள்ள லைகளை இலக்காகக் காண்டுள்ளது. இங்கு சிகரங்கள் .970 மீ முதல் 7,132 மீ வரை உள்ளன.

இந்த நடவடிக்கை வேலைவாய்ப் களை உருவாக்கி உள்ளூர் பாருளாதாரங்களை வலுப்படுத்தும் ன்று நேபாள சுற்றுலாத்துறையின் ணிப் பாளர் ஹிமல் கௌதம் தரிவித்துள்ளார்.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளில் முதல் றையாக நேபாளம் எவரெஸ்ட் சிகர னுமதி விலைகளை உயர்த்தியுள்ள லையில் இந்த அறிவிப்பு வந்துள் து.

ஏப்ரல்-மே மாத உச்ச பருவத்தில் லை ஏறுவதற்கு $11,000 இல் ருந்து $15,000 வரை செலவா ம்.

செப்ரெம்பர் மற்றும் நவம்பர் ாதங்களுக்கு இடையில் சீசன் ல்லாத ஏறுதல்களுக்கு $7,500 செலவாகும்.

டிசம்பர் முதல் பெப்ரவரி வரை 3,750 செலவாகும். (நி)

---

## ஓடுபாதையில் மோதிய விமானங்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மொன்டானா மாநிலத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விமான நிலையத்தில் தரையிறங்கிய ஒரு சிறிய ரக விமானம் ஓடுபாதையில் நிறுத்தப்பட்டிருந்த மற்றுமொரு விமானத்தின் மீது மோதியதால், பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஒருவருக்கும் பெரிய காயங்கள் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒற்றை இயந்திர விமானம் ஒன்று நான்கு பேருடன் வோஷிங்டனின் புல்மேனில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் கலிஸ்பெல் நகர விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றுள்ளது.

இதன்போது, விமானியின் கட்டுப்பாட்டை இழந்து விமானம் ஓடுபாதையிலும், பின்னர் நிறுத்தப்பட்டிருந்த பல விமானங்களை மோதியதில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ புல்வெளி பகுதிக்கும் பரவியதாக கலிஸ்பெல் பொலிஸ் அதிகாரி ஜோர்டான் வெனிசியோ தெரிவித்துள்ளார்.

விபத்தை அடுத்து விமானத்திலிருந்து பயணிகள் தாங்களாகவே வெளியேறியுள்ளனர்.

இரண்டு பேர் லேசான காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். (நி)

---

## பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும்
## அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முடிவை வரவேற்ற பிரான்ஸ்

(கன்பெரா)

காசாவில் காணப்படும் மனிதாபிமான நெருக்கடியை மறுதலிக்கும் மனோநிலையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காணப்படுகின்றார் என அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட விரக்தியே பாலஸ்தீன அரசை அவுஸ்திரேலிய அரசாங்கம் அங்கீகரிப்பதற்கு ஒரு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் இஸ்ரேலிய பிரதமருடன் மீண்டும் பேசினேன், அவர் பொது வெளியில் தெரிவித்ததையே என்னிடம் தெரிவித்தார்,

அது அப்பாவி மக்களிற்கு ஏற்படுத்தப்படும் தாக்கங்களை மறுப்பதாக காணப்படுகின்றது என அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முடிவை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் வரவேற்றுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நாட்களில் மட்டும் 77,482 சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

2025 ஆகஸ்ட் மாதத்தின் முதல் 10 நாட்களில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 77,482 ஆக பதிவாகியுள்ளது. இலங்கைச் சுற்றுலா மேம்பாட்டு ஆணையகம் தகவல் வெளியிட்டுள்ளது. மேலும், ஆகஸ்ட் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 8,691 பேரும், இத்தாலியிலிருந்து 6,036 பேரும், சீனாவிலிருந்து 5,659 பேரும், பிரான்ஸிலிருந்து 5,518 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கிடையில், ஆகஸ்ட் மாதத்திற்கான அண்மைய புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,445, 770 ஆக அதிகரித்துள்ளது. (நி)

# திருமலை துறைமுகத்தை வந்தடைந்த இந்தியக் கப்பல்

(திருமலை)

இந்தியக் கடற்படைக் கப்பலான "ஐ.என்.எஸ். ரனா" திருகோணமலை துறைமுகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்திற்காக வந்தடைந்தது.

இக் கப்பல் 147 மீற்றர் நீளம் கொண்டதுடன், 300 அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது

இக்கப்பல் இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நல்லுறவை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் அதன் குழுவினர்கள் பங்கேற்பார்கள். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-37
உயரம் : 6"
தகைமை/தொழில்: Bio Medical Engineer(USA)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்(USA)
தொ.இ: B/15852

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம் :5'8"
தகைமை/தொழில்-A/L,பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15853

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:ரோகினி
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15857

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம் :திருவோணம்
உயரம்:5'9"
தகைமை/தொழில்-O/L,Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15858

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா-16 12 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: BA,MBA,Banker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15859

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 12 இல் செவ்
கி-பா- 46
உயரம் : 5'3"
தகைமை/தொழில்:A/L,Assistant Nursing
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15830

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-ஆயிலியம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Accountant (france)
எதிர்பார்ப்பு: வெளிநாடு(france)
தொ.இ: G/15832

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்- புனர்பூசம் 2 இல் செவ்
உயரம்-5'5"
தகைமை/தொழில்:BA ,ஆசிரியர்(PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15835

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா -28 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்-அரச தொழில் (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு(பிரான்ஸ்)
தொ.இ: G/15836

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்:உத்தரட்டாதி 10 இல் சூரி செவ்
உயரம் : 5'5"
தகைமை/தொழில் -Doctor
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15838

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# பதவியைத் தக்கவைக்கும் எண்ணமில்லை - ஜனாதிபதி

(கொழும்பு)

நீண்டகாலத்திற்கு பதவியைத் தக்க வைத்துக்கொள்ள எந்தவொரு எண்ணமும் இல்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "இன்று நாம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர் பதவிகளை வகிப்பதோடு பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம்.

ஆனால், நாங்கள் ஆட்சியை கைப்பற்றும் போது, நாம் பதவி விலகும் மனதில் கொண்டே ஆட்சிக் கதிரையில் அமர்ந்தோம். எனினும், இந்த ஆட்சிக் கதிரையில் நீண்ட நாட்களுக்கு அமர எங்களுக்கு விருப்பமில்லை.

இந்த நாட்டை அழித்த ஒரு அரசியல் குழுவிடமிருந்து அதிகாரத்தைப் பறித்து மக்கள் அதனை எங்களுக்கு வழங்கியிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் அந்த அதிகாரத்தை உங்களிடம்ஒப்படைக்கும்எதிர்பார்ப்புடன் நாங்கள் இந்த ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருக்கின்றோம்.

தனது நிர்வாகத்திற்குப் பிறகு நாட்டைக் கைப்பற்ற நேர்மை, திறன் மற்றும் தகுதி கொண்ட இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (நி)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்குபிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் - திரு. சூரியகுமார் குமாரகுலசிங்கம்
விண்ணப்பதாரர் பெயர் - திரு. சூரியகுமார் குமாரகுலசிங்கம்
முகவரி - புது வீதி, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, புது வீதியில் ஆதன இல. 35 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "நிந்தளாவத்தை" என்ற ஆதனம் S. குமாரகுலசிங்கம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 22.04.2024 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் சசிதேவி நீலகண்டன் முகதாவில் இலக்கம் 948 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதி மூலம் "நிந்தளாவத்தை" நிலப்பரப்பு 8 குளி 5 1/3 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரை வந்தடைந்துள்ளது. 948ஆம் இலக்க உறுதியின் தாய்உறுதியாக அதே நொத்தாரிசு முகதாலில் 2024.03.27ஆம் திகதி 947ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தலும் வெளிப்படுத்தலும் உறுதியில் நிந்தாளவத்தை நிலப்பரப்பு 8 குளி 5 1/3 விஸ்தீரணமுள்ள ஆதனம் காலம்சென்ற தமது பெற்றோர் சின்னப்பு குமாரகுலசிங்கத்திற்கும், குமாரகுலசிங்கம் பெண் சிவயோகமலருக்கும் பிரசித்த நொத்தாரிசு N. மனோகரன் முகதாவில் 1987.09.03ஆம் திகதி 1035ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் வந்தடைந்தது என்றும் தமது மூத்த சகோதரியான ரதிவதனி குலேந்திரா என்பவருக்கு திருமணத்தின் போது சீதனமாக ஆதனம் வழங்கப்பட்டதென்றும் அதனால் இவ் ஆதனத்தில் அவருக்கு வழியுரித்து எதுவும் இல்லை என்றும், எனவே காலஞ்சென்ற தனது பெற்றோரின் குறித்த ஆதனத்தில் ஒவ்வொருவருக்கும் சொரியலாக 1/3 பங்கு வழியுரித்தாக வந்தடைந்ததாக சூரியகுமார் குமாரகுலசிங்கம், விஜயகுமார் குமாரகுலசிங்கம், அமிர்தவதனி கனகநாயகம் (திருமணத்தின் முன் குமாரகுலசிங்கம் மகள்) ஆகியோரால் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 947ஆம், 948ஆம் இலக்க உறுதியைப் பதிவு செய்யப்பட்ட G204/25 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளில் 947ஆம் இலக்க உறுதியின் தாயுறுதிக்குரிய H307/183 ஆம் இலக்க காணிப் பதிவுப் புத்தகம் தொலைந்துவிட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை தற்போது அளவெட்டி மத்தி கிராமசேவகர் பிரிவு J/216. வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பகுதி. வலிகாமம் வடக்கு பிரதேச் செயலர் பிரிவு "நிந்தளாவத்தை" நிலப்பரப்பு எட்டு குழி ஐந்துடன் மூன்றின் மேல் ஒன்று (நிலப் 8 குழி 5 1/3)கட்டடங்களும் கிணறும் செய்பயிர்களும்,

**இதன் எல்லைகள்**
**கிழக்கு- வீதி**
வடக்கு - ஐயம்பிள்ளை இளையதம்பியும் பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனம்
மேற்கு - கும்பிளாவளைப்பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம்
தெற்கு - ஒழுங்கை
இவ்வெல்லைப்படி இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை சூரியகுமார் குமாரகுலசிங்கம் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றும் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தரப்பத்தில் சூரியகுமார் குமாரகுலசிங்கம் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(5023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய கண்டுபிடிப்புக்களின் உந்துதல்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கண்டுபிடிப்புக்கள் தினந்தினம் புதுமையாக பலவினாக்களுக்கு விடைதருவனவாக செய்திகளாக வந்தவண்ணமே இருக்கின்றன. நாம் அல்லலுறும் பல விடயங்களுக்கு விடைகள் கண்டுபிடிப்புக்களாக வெளிவருகின்றன.

உலக விஞ்ஞானிகள் இத்தகைய பெருமைமிகு ஆற்றல்களில் தம்மை ஈடுபடுத்தி மனித குலம் மேம்பட பல புத்தாக்கங்களை புதுமைகளை நிதர்சனமானவைகளை அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றனர். அனைத்தும் மனித குலம் மேம்பட வாழ்வாங்கு வாழ வழிசெய்யும் என நாம் நம்பலாம். இத்தகைய அண்மைக்கால கண்டுபிடிப்புக்கள் ஆச்சரியத்தையும் அதிசயமானவையாகவும் இருக்கின்றதை எம்மினிய உறவுகளும் அறிந்து கொள்ள இங்கே பதிவிடப்படுகின்றன.

**1. தாவரங்களும் தாம் உணர்வதை வெளிப்படுத்துகின்றன.**

நாம் இன்னமும் தாவரங்களை ஐந்தறிவென்றும் அவர்களுக்கு உணர்வில்லை என்றும் வாதாடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தாவரங்கள் அவற்றில் ஏற்படும் சேதங்களை உணர்கின்றன என்பதனை கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவை தமக்கிடையேயும் உணர்வுகளை பரிமாறிக் கொள்கின்றன. தாவரமொன்று நீரின்றி வாடும் போது இலைகள் சரிந்து சுருண்டு தொங்கிக்கொண்டிருக்கும் பாங்கு தாவரங்களின் உணர்வுகளின் வெளிப்பாடு என அறிந்திருக்கின்றார்கள். அதே தாவரத்திற்கு நீர்ப்பாய்ச்சும் போது இலைகள் நிமிர்ந்து குருத்து கம்பீரமாகி பாய்ந்தோடும் காற்றிற்கு நன்கு அசைந்தாடும் பாங்கு அவற்றின் மகிழ்ச்சி உணர்வின் வெளிப்பாடாகிறது.

தாவரத்தின் கிளைகளை வெட்டும் போதும் இலைகளை ஒடிக்கும் போதும் தாவரங்களுக்கு வலிக்கின்றது என்பதனை அவை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. பாவம் மனித குலம் அதனை உணரமுடியாமலே போய்விடுவது மட்டுமல்ல தாவரங்களை தாம் நினைத்தவாறு வெட்டி, கத்தரித்து என அவற்றை படாதபாடுபடுத்துகிறோம்.


நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் நாம் என்ன தாவரங்களுக்கு செய்தாலும் அவற்றினால் அதனை உணர்வதோடு மட்டுமல்லாமல் அதனை ஏனைய தாவரங்களுக்கும் எமக்கும் கடத்தும்

**2. தேனீக்களின் ஓய்வின்றிய உழைப்பு**

தேனீக்களின் இருப்பு என்பது மனிதகுலத்தின் இருப்புக்கு சமனானது. அவையின்றேல் மனிதனின் உணவுக்கு பஞ்சம் ஏற்பட்டுவிடும். ஏறக்குறைய 60-65 சதவீதப் பயிர்கள் அயன் மகரந்த சேர்க்கையால் விதைகளை கனிகளை உருவாக்குகின்றன. அயன் மகரந்த சேர்க்கையின் முக்கிய காரணியாக காணப்படும் தேனீக்கள் தொடர்ச்சியாக ஓய்வின்றி உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவை என்பதனை அனைவரும் அறிவர்.

தேனீக்களின் குடி தனித்துவமானது. தமது குடியொன்றில் ஒரு ராணித்தேனீயையே தலைமையாக வைத்து அனைத்தும் இயங்கும் தன்மை கொண்டவை. அதிலும் சிறப்பு என்னவென்றால் தமது குடியிலிருந்து சூரியன் இருக்கும் திசையில் உள்ள கோணத்தையும் உணவு அல்லது பூக்களுள்ள

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



கோணத்தையும் கணக்கிட்டு ஏனைய தேனீக்களுக்கு தெரிவிப்பதற்காக தமது குடியில் ஒரு வகை நடனமாடி (Bee dance) ஏனைய வேலையாள் தேனீக்களை உணவிருக்கும் பக்கமாக திசைகாட்டிவிடும். திசைமட்டுமல்ல உணவிருக்கும் தூரத்தையும் நடனத்திலேயே காட்டிவிடும். விடயமென்னவெனில் 14 வேலையாள் தேனீக்களின் அவற்றினது வாழ்நாளின் மொத்த உழைப்பாக கிடைப்பது ஒரு துளி தேன் மட்டுமே என்பதனை புரிந்து கொள்ளுங்கள். ஆக மொத்தத்தில் ஒரு துளி தேன் என்றாலும் அதில் அத்துணை உழைப்பு தங்கியிருக்கின்றது.

**3. பக்ரீறியா உலோகங்களை உள்ளிழுத்து தங்கமாக வெளிவிடுகின்றது**

தங்கத்தின் விலை உலகளவில் எகிறிக் கொண்டிருக்கும் போது குறிப்பிட்ட ஒருவகை பக்ரீறியா நச்சு உலோகங்களான செப்பு மற்றும் கட்மியம் என்பனவற்றை உண்டு தங்க நுண்துணிக்கைகளை வெளிவிடுகின்றன. இவ்வாறான பக்ரீறியாக்களின் மூலமும் தங்க துணிக்கைகள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு என ஆய்வு கூறுகின்றது. உலகளவில் தங்கத் துணிக்கைகள் உருவாக்கத்தில் நுண்ணங்கிகளின் பங்களிப்பினை இது மேலும் அதிகரித்திருக்கின்றது.

**4. பிளாஸ்ரிக் போத்தலை சாப்பிடும் பூஞ்சணம்**

பிளாஸ்ரிக்கு மனித குல வரலாற்றில் பலதரப்பட்ட பாவனைக்கான கண்டுபிடிப்பு என அதனை கண்டுபிடித்து பயன்படுத்தத் தொடங்கிய காலந்தொட்டு இற்றை வரை எமது வாழ்வியலுடன் இரண்டறக் கலந்தும் விட்டது. பிளாஸ்ரிக் இல்லாத காலம் என்பதனை கற்பனையில் கூட நினைக்க முடியவில்லை என்றாலும் உலக நாடுகளில் பல இடங்களில் பிளாஸ்ரிக் பாவனை முற்றாகவே தடைசெய்யப்பட்டிருப்பதும் உண்டு. இருப்பினும் பிளாஸ்ரிக்கினை பயன்படுத்தியபின் அதனால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்த முனைகின்றன. கழிவுகள் கொட்டுகின்ற இடமொன்றில் இவ்வாறு வீசப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்களில் ஒருவகை பூஞ்சணம் வளர்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பூஞ்சணம் ஆய்வுகூடத்தில் பிரித்தெடுக்கப்பட்டு அதனை விருத்தி செய்வதன் மூலம் பிளாஸ்ரிக் கழிவுகளை சுலபமாக பிரிந்தழியச்செய்து அழித்துவிடலாம். கழிவாக பிளாஸ்ரிக் சூழலில் மாசடையச்செய்யும் பொருளாகவும் நுளம்பு மற்றும் வேறு பூச்சிபீடைகள் பெருகுவதற்கு காரணியாகவும் காணப்படுகின்றன.

அதனால் பிளாஸ்ரிக்கினை இலகுவில் பிரிந்தழியச் செய்தால் சுற்றுசூழல் பாதுகாப்பு இலகுவாகி விடுவதுடன் அதிலிருந்து பயனுள்ள பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

**5. கறையான் வளர்க்கும் பூஞ்சண தோட்டம்**

எமது உடைமைகளை புத்தகங்களை அலுவலகங்களில் உள்ள பொருட்களை கறையான் உண்பதனை அறியும் போது அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த வழிவகைகள் செய்தல் வேண்டும். அந்த வகையில் கறையான் புற்றைப் பற்றி ஆராய்ந்தால் அதில் மிகவும் பாதுகாப்பான அறையில் இராணி கறையான் குடிகொண்டிருக்கும்.

மேலும் அந்த இடம் நீர் உட்புகாத பாதுகாப்பானதாக அந்த கறையான் குடியை தக்கவைத்துக் கொள்ளும். இதில் கறையான் புற்றில் ஆங்காங்கே கறையான் புத்தாம்பாளம் (Comb) காணப்படும். அதில் கறையானின் இளவயது உறுப்பினர்கள் உண்பதற்காக பூஞ்சண தோட்டத்தினை உருவாக்கியிருப்பர். அதனை வெட்டிப்பார்த்தால் உள்ளே பூஞ்சணம் மிதமாக வளர்ந்திருப்பது தெரியும். எனவே கறையானை அழிப்பதென்றால் அதற்கு ஒவ்வாத ஆனால் அதனது இளவயது கறையான்களை அழிப்பதற்கு சமன். இங்கே கறையான் வளரும் போது அதில் தரங்குறையாமல் இலகுவில் அழிக்கக்கூடிய கறையான் வளர்க்கும் பூஞ்சணத்தை அழிக்கும் இயற்கையாக கிடைக்கும் பூஞ்சணங்களை பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியும். இதன் மூலம் கட்டட நிர்மாணத் துறையில் கறையானற்ற நிலத்தை பெறுவதற்கு இத்தொழில்நுட்பம் உதவும்.

**6. தும்பியும் ஊசித் தட்டானும் நுளம்பை உண்ணும்**

தும்பியும் (Dragonfly) ஊசித்தட்டானும் (Damselfly) பூச்சியளாயினும் இரைகௌவிகள். சாதாரணமாக ஒரு தும்பி 100 நுளம்புகளை சாப்பிடும் வல்லமை உள்ளதாக அறியக்கிடைக்கின்றது. அவ்வாறாயின் தும்பி மற்றும் ஊசித்தட்டான்களின் எண்ணிக்கையை அதிகரித்து விட்டால் நுளம்புப் பெருக்கத்தை இலகுவில் இரைகௌவி பூச்சியைக் கொண்டே உயிரியல் முறையில் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 843





ராக்கம்மாள் பூங்குழலியைப் பார்த்ததும், "அடி பெண்ணே! பிழைத்து வந்தாயா? உன்னைக் கொன்று போட்டிருப்பார்களோ என்று பயந்து போனேன். இதோ பார்! உன் அத்தையைக் காப்பாற்ற முயன்றதில் என் மண்டையில் எவ்வளவு பெரிய காயம்? வைத்தியர் மகனிடம் காயத்துக்கு மருந்து ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்?" என்றாள்.

"கரையர் மகளுக்கு ஏதேனும் காயம் பட்டிருந்தாலும் மருந்து போட்டுக் குணப்படுத்துகிறேன்" என்றான் வைத்தியர் மகன்.

பூங்குழலி அவனுக்கு மறுமொழி சொல்லாமல், "அண்ணி! அத்தையைப் பிடித்துக் கொண்டு எந்தப் பக்கம் போனார்கள் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"நான் பார்க்கவில்லை தஞ்சாவூர்ச்சாலையோடு போனதாக இந்த வைத்தியர் மகன் சொல்லுகிறான்"

"அண்ணி! நானும் அமுதனும் அத்தையைத் தொடர்ந்து போகிறோம். அப்பாவிடம் சொல்லிவிடு! வா, அமுதா!" என்று பூங்குழலி அங்கிருந்து உடனே போகத் தொடங்கினாள்.

அப்போது வைத்தியர் மகன், "பூங்குழலி! சற்று நில்! உங்களால் அவர்களைத் தொடர்ந்து போக முடியாது. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் காத்திருந்த குதிரைகள் மீதேறி அவர்கள் போகிறார்கள். என்னிடம் குதிரை இருக்கிறது. நான் வாயுவேக மனோவேகமாய்க் குதிரையை விட்டுக் கொண்டு சென்று அவர்கள் போய்ச்சேரும் இடத்தைக் கண்டுபிடித்து உங்களுக்குச் சொல்வேன்.

அதற்குப் பிரதியாக நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நீயும் உன் அத்தையும் படகில் ஏறிக் கொண்டு எங்கே போவதற்குக் கிளம்பினீர்கள்? அதை மட்டும் சொல்லி விடு!" என்றான்.

பூங்குழலி, "அண்ணி! இவருடைய உதவி எங்களுக்கு தேவையில்லை! நாங்கள் போகிறோம். அப்பாவிடம் மட்டும் சொல்லி விடு!" என்றாள்.

வைத்தியர் மகன் அப்போதும் விடவில்லை. "ஆகா! கரையர் மகளின் கர்வத்தைப் பார்! என் உதவி தேவை இல்லையாம்! பெண்ணே, உனக்கு ஏன் என் பேரில் இத்தனை கோபம்? நீ அரச குமாரனைக் கலியாணம் செய்து கொள்வதை நானா குறுக்கே நின்று தடுத்தேன்? என்னை வஞ்சித்து ஏமாற்றி விட்டுப் படகில் ஏற்றிக் கொண்டு போனாயே? அந்த வாணர் குலத்து வந்தியத்தேவனல்லவா உன் ஆசைக்குகந்த இராஜகுமாரனை நடுக்கடலில் தள்ளிக் கொன்று விட்டான்! என் பேரில் கோபித்து என்ன பயன்?" என்று சொல்லிவிட்டு 'ஹா ஹா ஹா' என்று பொய்ச் சிரிப்புச் சிரித்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காட்டில் தேர்தலோ தேர்தல்



(நேற்றைய தொடர்ச்சி)

கூடவே நத்தையார் சார்பாக வண்டுகளும், பாம்புகளும் வாதிட்டதால் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பின் நத்தையார் சார்பாகவும் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

1. ஊர்வன அனைத்துக்கும் மனிதர்கள் தொல்லை படுத்தக் கூடாது,

2.காடுகளை அழித்து விலங்குகளின் வாழ்விடங்களை விட்டு விரட்டக்கூடாது

3.விவசாய நிலங்களில் பூச்சி மருந்து தெளிப்பதாக கூறி ரசாயனக் கலவைகளை தெளிக்க கூடாது. இதனால் பூச்சி இனங்கள் அடியோடு அழிக்கப்படுகிறது. இயற்கை மருந்துகளை அடிப்பதால் பூச்சிகள் விலகிவிடுமே தவிர அதன் உயிருக்கு அபத்து வராது இப்படி பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டது. காடே அல்லோகலப்பட்டது. தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு இனத்தை சேர்ந்த விலங்குகளும், மற்ற இனத்தைச் சேர்ந்த விலங்குகளுடன் கூட்டணி வைத்து தேர்தலை கலக்கிக்கொண்டிருக்கின்றன. "காடு நலம் பெற உங்கள் வாக்கு அவசியம் என்று விளம்பரங்களை கரடியார் தலைமையிலான தேர்தல் கமிசன் காடு, மலை,செடி, கொடிகளில், தொங்க விட்டு அனைத்து விலங்குகளையும் வோட் போட வைக்க முயற்சி செய்தன.

திடீரென மீன் இனத்தைச் சேர்ந்தவர்களும், தண்ணீருக்குள் வாழ்பவர்களும் தேர்தல் கமிசன் தலைவர் கரடியாரைச் சந்தித்து ஒரு மனு அளித்தன. எங்கள் இனத்துக்கு என்று தனியாக ஒரு வாக்குச்சாவடி ஆற்றுக்குள்ளோ, குளத்துக்குள்ளோ வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்க அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆற்றுக்குள் முதலை இனங்களுக்கு தனியாகவும், மீன், தவளை, மற்ற இனங்களுக்கு தனியாகவும் வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டன்.நீர் யானைகளுக்கு நிலத்திலும், நீரிலும் ஓட்டை போட அனுமதி அளித்தன. தவளைகளும் கொடி பிடிக்க, அவைகளுக்கும், இந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது.தேர்தல் நாளும் வந்தது. அனைத்து வாக்கு சாவடிகளிலும் விலங் குகள், பறவைகள், பூச்சிகள், வரிசையாக நின்று வாக்களித்தன. எந்த கலவரமுமின்றி தேர்தல் அமைதியாக நடந்ததற்கு கரடியாரை விலங்குகள் பாராட்டின. ம்று நாள் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. யாரும் எதிர்பாராவிதமாக "நத்தையார்" அமோகமாக வெற்றி பெற்று இந்த காட்டுக்கு தலைவனாக அறிவிக்கப்பட்டார். பூச்சி இனங்களும், ஊர்வன இனங்களும், எண்ணிக்கையில் அதிகமாக இருந்ததால் அனைத்தும் நத்தைக்கே ஓட்டை போட்டு பெரு வெற்றி பெற செய்து விட்டன. வெற்றி அறிவிக்கப்பட்டு பதவி ஏற்க நத்தையாருக்கு மூன்று நாட்கள் ஆகியது. அது மேடை ஏறி, சிங்கத்திடம் உறுதி பொழி ஏற்க அவ்வளவு காலமாகிவிட்டது.

பூச்சி இனங்களை தவிர மற்ற விலங்குகளுக்கு நத்தையாரை பேட்டி எடுக்க மிகுந்த சிரமப்பட்டன. அதிலும் யானையாருக்குத் தான் மிகுந்த சிரமம், ஒவ்வொரு முறையும் நத்தையாரை பார்த்து ஏதாவது பேச வேண்டுமென்றாலும், மண்டியிட்டு குனிந்து பின் எழுவது என்பது அப்பப்பா கொடுமையாக இருந்தது.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வியும் நன்னடத்தையுமே ஒரு மனிதனை நல்லவனாக்குகின்றன. – அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்களும் இவர்களும் இருக்கும்வரை.....

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிங்களப் பேரினவாதிகளுக்கு மட்டுமல்ல, நம் தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினருக்கும் விருப்பமில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், இனப்பிரச்சினை என்ற விடயம் இருக்கும்வரைக்குமே தமது அரசியல் பிழைப்பு சாத்தியமாகும் என்பதை உணர்ந்து கொண்டவர்கள் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

இதன் காரணமாக அவர்கள் சுமுகமான நிலைமைகளைக் குழப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருப்பர்.

இதுதவிர, புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் சிலவும் இனப்பிரச்சினை என்ற விவகாரம் உயிர்ப்போடு இருக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளன.

அவர்களைப் பொறுத்தவரை புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்காகச் சேகரிக்கப்பட்ட நிதியை பங்கு போடுவதன் பொருட்டு, இனப்பிரச்சினைக்கான தீர்வை எவரும் எட்டாத வகையில் குழப்பங்களைச் செய்வது அவர்களுக்கு அவசியமாகிறது.

இவர்களுக்கு ஏற்றாற்போல் சிங்களப் பேரினவாதிகள் அதிலும் குறிப்பாக விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா போன்றவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்தை முன்வைத்து; தமிழ் மக்களின் மனங்களை ரணமாக்குகின்றனர்.

ஆக, தென்பகுதியில் இருக்கக்கூடிய பேரினவாதிகளும் தமிழர் தரப்பில் உள்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு தரப்பு அரசியல்வாதிகளும் புலம்பெயர் நாடுகளில் புலிகளின் பணத்தில் சுகபோகம் நடத்துகின்ற கூட்டமும் இருக்கும் வரை இனப்பிரச்சினையை ஒருபோதும் தீரக்க முடியாதென்பது சர்வநிச்சயம்.

எதுஎவ்வாறாயினும் தென்பகுதியில் சிங்கள மக்கள் நடத்திய அரகலப் போராட்டம் சிங்களப் பேரினவாதிகளின் கொட்டத்தை கணிசமாக அடக்கியுள்ளது.

ஆம், சிங்கள மக்கள் அரகல போராட்டத்தை நடத்தாவிட்டிருந்தால், ராஜபக்ஷ தரப்பு இன்று எங்கள் இனத்தைக் கருவறுத்திருக்கும்.

ஏதோ கடவுள் செயலாக அது தவிர்க்கப்பட்டது. இருந்தும் அந்தச் சூழ்நிலையைக் கூட நம்மவர்கள் தக்கமுறையில் பயன்படுத்தவில்லை.

இவ்வாறான நிலைமைக்குக் காரணம் நம்மவர்களில் ஒரு தரப்பினருக்கு ஈனர்களின் ஆட்சிதான் தேவையாக இருக்கிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

# தேசிய பாதுகாப்பை உறுதி செய்க நாடு பூராக கொலைக் கலாசாரம்

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ

நாடு பூராகவும்கொலைக்கலாசாரம் பரவி வருகின்றது. தேசியப் பாதுகாப்பை உறுதி செய்து மக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாளுக்கு நாள் நாடு பூராகவும் கொலைக் கலாச்சாரம் பரவி வருகிறது. இன்றும் கூட, நாட்டின் பாதுகாப்புப் பிரதி அமைச்சரினது தேர்தல் தொகுதியான ஹோமாகம மீகொட பகுதியில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்றளவில் கூட அரசாங்கத்தால் இந்தக் கொலைக் கலாசாரத்தை தடுக்க முடியாது போயுள்ளது.

தேசிய பாதுகாப்பு குறித்து ரியூசன் தருவதற்கு ஒரு நாற்காலியை எடுத்து வருமாறு தெரிவித்த பாதுகாப்பு பிரதி அமைச்சரின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கூட இந்தக் கொலை இடம்பெறுகின்றன.

பாதாள உலகக் கும்பல்கள், திட்டமிட்ட அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்கள், கொலைகாரர்கள், தோட்டாக்கள், குண்டுகள், துப்பாக்கிகள், வாள்கள் போன்றனவைக் காட்டியும் பயன்படுத்தியும் சமூகத்தின் கட்டுப்பாட்டை தமது பிடியில் எடுத்துள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளதா? என்று தான் கேள்வி எழுப்புகிறோம்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தேசியப் பாதுகாப்புக்கு பிரச்சினையாக அமைந்து காணப்படவில்லை என்று அரசாங்கம் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறது.

நாட்டில் மக்கள் இறந்து கொண்டிருந்தால், அது தேசிய பாதுகாப்பு சார் பிரச்சினைகளில் ஒன்றாகும். தேசியப் பாதுகாப்பை உறுதி செய்து மக்களின் உயிரைப் பாதுகாப்பது ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பொறுப்பாகும். இவ்வாறு செய்வது நாட்டுக்கான கடமை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# மன்னாரில் இளம்தாய் மரணம் சந்தேக நபர்கள் விடுவிப்பு

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துயாவின் மரணம் தொடர்பிலான வழக்கு விசாரணையில் சந்தேக நபர்களை பிணையில் செல்வதற்கு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சிந்துஜாவின் வழக்கு விசாரணையில் சந்தேக நபர்களாகப் பெயர் குறிப்பிட்ட தாதிய உத்தியோகஸ்தர் ஒருவரும் இரண்டு குடும்ப நல உத்தியோகஸ்தர்களும் மன்னார் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் நீதிமன்ற உத்தரவினால், இம் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது குறித்த வழக்குடன் சம்மந்தப்பட்ட மருத்துவர் முன்னிலையாகாத நிலையில் குறித்த மருத்துவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதே நேரம் குறித்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நபருக்கு தலா பத்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் 26ம் திகதி மீண்டும் குறித்த வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் சிந்துஜாவின் சார்பில் சட்டத்தரணி டெனிஸ்வரன் சமர்ப்பணங்களை மேற்கொண்டதுடன் இறந்த சிந்துஜாவின் தாயும் அவருடைய மகனும் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,285)

# வடமராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் சேவை

ஜனாதிபதியின் எண்ணக்கருவான கிளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக "இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு - ஒற்றுமையின் தூய்மையான பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை(14) வடமராட்சி பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை,வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை இந் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு - இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள் - கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன. (ம-7,60)

## ஹோமாகமப் பிரதேச சபையின்

# முன்னாள் உறுப்பினர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை

ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சாந்த முதுங்கொடுவ (வயது - 46) துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

மீகொட - ஆட்டிகல வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, காரில் வந்த மர்ம நபர்களால் அவர் சுடப்பட்டுள்ளர்.

இதனையடுத்து அவர், ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவரது சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 36

சொக்கன்

அக்கம் பக்கத்தில் விசாரித்தார்கள் பெட்ரோ கெமிக்கல் உற்பத்திக்கு யுரேனியத்தைப் பயன் படுத்தமுடியுமா?

நிச்சயமாகப் பயன் படுத்தலாம் என்று பதில் வந்தது. கொஞ்சம் தெம்பாக அஸ்மாராவிடம் பேரம் பேச ஆரம்பித்து SGM சரி என்ன விலை கொடுப்பீர்கள்?

நீங்கள் கேட்கிற விலையைத் தருகிறோம் என்று பரபரத்தது அஸ்மாரா, சீக்கிரமாக மஞ்சள் கேக்கை அனுப்பி வையுங்கள்.

அஸ்மாராவுக்கு என்ன அவசரமோ 5GM இற்குப் புரியவில்லை. ஆனால் இருநூறு தொன் மஞ்சள் கேக் என்றால் ரொம்பப் பெரிய ஓடர் தான் ஏகப்பட்ட பணம் வரும். ஆகவே எந்தக் கேள்வியும் கேட்காமல் உடனடியாக மஞ்சள் கேக்கை அனுப்பி வைக்கத் தயாரானார்கள்.

ஒரே ஒரு பிரச்சினை, மஞ்சள் கேக்கிலிருந்து யுரேனியத்தைப் பிரித்து எடுப்பது சாதாரண வேலை இல்லை. அதற்குத் தேவையான தொழிற்சாலை இயந்திரங்கள், டெக்னாலஜி எல்லாம் அஸ்மாராவிடம் இருக்கிறதா?

நோ ப்ராப்ளம் என்றது அஸ்மாரா. நீங்க மஞ்சள் கேக்கை இத்தாலியில் இருக்கிற எங்க பார்ட்னருக்கு அனுப்பி விடுங்கள் அவர்கள் அதைச் சுத்தப்படுத்தி யுரேனியமாக மாற்றி எங்களுக்குக் கொடுப்பார்கள்.

ரொம்ப சந்தோஷம். எந்தக் கப்பல்ல அனுப்ப வேண்டும்? நீங்கள் சரக்கை ஆயத்தமாக்குங்கள் . கப்பல் வந்து சேரும்.

அதன்பிறகு வேலைகள் மளமளவென்று நடந்தன. ஏற்கெனவே பேசியபடி இருநூறு தொன் மஞ்சள் கேக்கிற் கான விலையை அஸ்மாரா நிறுவனம் SGM இற்கு அனுப்பி வைத்தது. அதனை இத்தாலிக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அரசாங்க அனுமதி பெறப்பட்டது.



1968 நவம்பரில் SGM நிறுவனம் இருநூறு தொன் மஞ்சள் கேக்கைப் பாதுகாப்பாக ட்ரம்களில் நிரப்பியது. மொத்தம் 560 ட்ரம்கள் பக்கத்திலிருந்த ஆன்ட்வெர்ப் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன.

அதேநேரம் அந்தத் துறைமுகத்துக்கு ஒரு சரக்குக் கப்பலும் வந்து நின்றது. அதன் பெயர் ஷீர்ஸ்பெர்க்ஏ!

இந்தக் கப்பல் லிபேரியா நாட்டு நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானது. அதன் முதலாளி பர்ஹம்யாரில் செல் துருக்கியைச் சேர்ந்தவர்.

560 ட்ரம்களில் இருந்த மஞ்சள் கேக் ஷீர்ஸ்பெர்க்ஏ கப்பலுக்கு மாற்றப்பட்டது பெல்ஜியம் அதிகாரிகள் எல்லாவற்றையும் சரிபார்த்துக் கையெழுத்துப் போட்டார்கள். கப்பல் கிளம்பியது. இப்போது கண்ணைமூடிக்கொண்டு மனத்துக்குள் ஒரு சின்ன மேப் வரைந்து பாருங்கள். இருநூறு தொன் மஞ்சள் கேக் பெல்ஜியம் நாட்டிலிருந்து இத்தாலிக்குப் பயணம் செய் கிறது. அதற்காகக் காசு கொடுத்த கம்பெனி ஜேர்மனியில் இருக்கிறது. கப்பல் லிபேரியா நாட்டைச் சேர்ந்தது. அதன் முதலாளி ஒரு துருக்கியர்.

இதில் எங்கேயாவது இஸ்ரேல் வாசனை அடிக்கிறதா? இல்லையே? அதுதான் மொசாட்டின் சாமர்த்தியம்!

உண்மையில் இதுவரை நாம் பார்த்த நாடகம் மொத்தமும் மொசாட் ஏஜென்ட்கள் அரங்கேற்றியது. அஸ்மாரா கம்பெனி ஷீர்ஸ் பெர்க்ஏ கப்பல் அதன் முதளாளி என்று எல்லோருமே மொசாட் எழுதிக் கொடுத்த வசனங்களைக் கச்சிதமாக நடித்துமுடித்தார்கள்.

ஆனால் ஷீர்ஸ்பெர்க்ஏ கப்பல் இப்போது இத்தாலிக்குதானே போய்க்கொண்டிருக்கிறது? அதில் இருக்கும் மஞ்சள் கேக் எப்படி இஸ்ரேலுக்குக் கிடைக்கும்?

இவ்வளவு தூரம் கவனமாக யோசித்துக் திட்டம் தயாரித்த மொசாட் முக்கியமான இந்த விடயத்தில் கோட்டை விடுவார்களா? அதற்கும் சில ரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆன்ட்வெர்ப் துறைமுகத்திலிருந்து கிளம்பிய ஷீர்ஸ்பெர்க்ஏ கப்பல் ஆரம்பத்தில் ஒழுங்காக இத்தாலியை நோக்கித்தான் பயணம் செய்தது. அதன்பிறகு எங்கேயே திசை மாறி வேறு பக்கம் போய்க் காத்திருந்தார்கள்.

ஓர் அதிகாலை நேரம் ஷீர்ஸ்பெர்க்ஏயை நோக்கி இன்னொரு பெரிய சரக்குக் கப்பல் மிதந்து வந்தது. அதன் இருபக்கமும் பாதுகாப்புக்காக இரண்டு போர்ப் படகுகள்.

ஷீர்ஸ்பெர்க்ஏயில் இருந்த மாலுமிகள் ஊழியர்கள் தொழிலாளிகள் யாருக்கும் எதுவும் புரிய வில்லை.

இந்தக் கப்பல் எதுக்கு நம்மிடம் வருகிறது? என்று குழம்பினார்கள்.

சைலன்ஸ் என்று உறுமினார். ஷீர்ஸ்பெர்க்ஏ கப்பலின் கப்டன் யாரும் எதுவும் பேசக் கூடாது. வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கள்.

ஊழியர்கள் மௌனமானார்கள். அடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்கிற திகில் அவர்களுடைய கண்களில் தெரிந்தது.

சிறிது நேரத்தில் அந்த இன்னொரு கப்பல் ஷீர்ஸ்பொர்க்ஏயை நெருங்கிவிட்டது. இரண்டு கப்பல்களும் ஒன்றாகப் பிணைக்கப் பட்டன.

இப்போது ஷீர்ஸ் பெர்க்ஏயில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த மஞ்சள் கேக் ட்ரம்கள் ஒவ்வொன்றாக அடுத்த கப்பலுக்கு மாற்றப் பட்டன.

வந்தவர்கள் அதிகம் பேசவில்லை. ஆனால் வேலைமட்டும் மும்முரமாக நடந்தது.

ஷீர்ஸ்பெர்க்ஏ ஊழியர்கள் திகைத் துப் போனார்கள். இங்கே என்ன நடக்குது? ஏதோ ஒரு கப்பல் நம்ம சரக்கையெல்லாம் அநியாயமாக கொள்ளையடிக்கிறார்கள். நாம் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக் கிறோமே என்று பதறினார்கள்.

ஆனால் ஷீர்ஸ்பெர்க்ஏ கப்டன் இதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவே இல்லை. உனக்கு மஞ்சள் கேக்தானே வேணும்? சாப்பிடு என்பது போல் மௌனமாக நின்று கொண்டிருந்தார்.

அவ்வப்போது பக்கத்துக் கப்பலில் இருந்து சத்தமாக ஏதோ உத்தரவுகள் கேட்டன. அது என்ன மொழி என்று ஷீர்ஸ்பெர்க்ஏ ஊழியர்களுக்குப் புரியவில்லை.

ஒரு வேளை அவர்களுக்கு ஹீப்ரு மொழி தெரிந்திருந்தால் வந்திருப்பது ஓர் இஸ்ரேலியக் கப்பல் என்று ஊகித்திருப்பார்கள். மஞ்சள் கேக் மொத்தமும் இப்போது இஸ்ரேலுக்கு கடத்தப் படுகிறது என்பதை புரிந்து கொண்டிருப்பார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டை...

வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த அச்சுவேலிப் பொலிஸார் சடலத்தை மீட்டதோடு விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்ட பெண் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

யாழ்மாவட்ட திடீர்மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஊர்காவற்...

தில் பாரிய கிடங்கு வெட்டி அதனுள் பெருமளவான கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னாரில் இருந்து வருகை தந்த சிறப்பு பொலிஸ் குழுவினர் நிலத்தின் கீழ் புதைத்து வைத்திருந்த கஞ்சாவை மீட்டுள்ளனர்.

குறித்த கஞ்சா போதைப்பொருளை இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வந்து, அவற்றை கடற்கரையை அண்டிய பகுதியில் நிலத்தில் புதைத்து வைத்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## பொலிஸ்மா...

பிரியந்த வீரசூரியவை நியமிக்க ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க முன்வைத்த பரிந்துரைக்கு அரசமைப்புப் பேரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசமைப்புப் பேரவை, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்றுப் பிற்பகல் கூடியிருந்த நிலையில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்துப் பொலிஸ்மா அதிபருக்கான பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது.

இதனையடுத்துப்பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரைப் புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பரிந்துரைத்து அரசமைப்புப் பேரவைக்கு பரிந்துரைத்திருந்தார்.

இந்தநிலையிலேயே குறித்த பரிந்துரையினை ஏற்ற அரசமைப்புப் பேரவை பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரியவை நியமிக்க அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## இ.போ.ச மோதி...

ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் எழுதுமட்டுவாள் தெற்குப் பகுதியைச் சேர்ந்த செல்வகுணசிங்கம் பேரின்பநாயகி (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார்.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்து பயணித்துக் கொண்டிருந்த வேளை எழுதுமட்டுவாள் பகுதியில் கிளை வீதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பெண் ஏ9 வீதியில் ஏற முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த குறித்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30)

## பொருளாதார...

மாத இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண பொருளாதார மத்திய நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் மீள ஆரம்பிப்பது மற்றும் அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடவே யாழ்ப்பாணம் வந்துள்ளேன்.

இலங்கையைப் பொறுத்தவரை 18 பொருளாதார மத்திய நிலையங்கள் காணப்படுகிறது. அதில் 14 இயங்கி வருகிறது.

வடக்கில் அண்ணளவாக ரூபா. 200 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் இயங்கவில்லை.

இந்நிலையம் மக்களுக்குப் பொருத்தமான பாதையாகக் காணப்படவில்லை. பிரதேச செயலகத்தின் கீழ் செயற்பாடுகள் நடைபெறுகிறது. அமைச்சின் கீழ் எந்தவொரு செயற்பாடும் காணப்படவில்லை.

இந் நிலையத்தை மீள அடுத்த மாத இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் இக்கலந்துரையாடலில் பொருளாதார மத்தியநிலையத்துக்குரிய கடை உரிமையாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு முன்னராக அமைச்சர் தலைமையிலான குழுவினர் மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# வீட்டின் மீது தாக்குதல் ஒருவர் காயம்

வவுனியா உக்குளாங்குளம், சிவன்கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் நுழைவாயில் மற்றும் வீட்டு வேலி மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது. தாக்குதல் சத்தத்தையடுத்து வெளியில் வந்த வீட்டு உரிமையாளர் மீதும் அக்குழு தாக்குதல் நடத்தியதில் அவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)


மஹஜன சம்பத — திகதி 2025.08.12 — சீட்டிழுப்பு இலக்கம் 5919 — G 9 6 9 9 2 2 — அத சம்பத — G 9 9 2 2 — 0494 — National Lotteries Board

சுப தவசக் — 2025.08.12 — 0035 — மகரம் 04 21 30 41

தன நிதானய — திகதி - 2025.08.12 — சீட்டிழுப்பு இலக்கம் - 1949 — M 01 13 16 67 M — Double Chance 99601

மெகா பவர் — திகதி 12/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2267 — A 14 22 57 65 66

ஜய — திகதி 2025.08.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0187 — C 1 4 3 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4161 — சீட்டிழுப்பு திகதி 12.08.2025 — F 04 10 20 60 — F

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.12 — சீட்டிழுப்பு இலக்கம் 1228 — தனுசு 22 41 58 62 தனுசு — 13300

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி டென் சம்பத — 12.08.2025 — வெற்றி வாரம் 0627 — G 1 2 4 9 8 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,831,875.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2893 — சீட்டிழுப்பு திகதி 2025.08.12 — தினம் செவ்வாய்க்கிழமை — 48 50 73 78 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,373,440.80

சனிதா — திகதி 12.08.2025 — வெற்றி வாரம் 5054 — 12 43 44 67 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,926,399.02

சசிரி — 746 — 12.08.2025 — செவ்வாய்க்கிழமை — 03 24 32 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4605 — சீட்டிழுப்பு திகதி 12.08.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 07 14 37 39 கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,297,246.80

லக்ன — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — U 12 06 27 30 33 — 2069 — 12.08.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.587,441,836.00

அட கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — 2719 — 2025.08.12 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,262,601.20 — 44 56 59 63 Y


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூத்திரதாரி...

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்க்கட்சியின் தேவைக்கேற்ப நாம் செயற்படப் போவதில்லை. உண்மையான விசாரணைகளை மறைப்பதற்காக எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்களில் நாம் சிக்கிக் கொள்ளப் போவதுமில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முறையாக இடம்பெறாத போது சஜித் பிரேமதாஸ தரப்பினரால் அருண ஜயசேகரவின் பெயர் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிடப்படவில்லை.

அதன் பின்னர் இந்த விசாரணை நடவடிக்கைகளை நாம் சரியாக முன்னெடுத்து குறிப்பிட்ட வழிமுறைகளின் கீழ் பிரதான சூத்திரதாரிகள், இதற்கு ஆதரவளித்தோர், இதில் அரசியல் இலாபமீட்டியோர் தொடர்பில் முறையாக விசாரணைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவர்கள் இந்த விவகாரத்தை கைகளில் எடுத்துள்ளனர்.

தகவல் தெரிந்திருந்தும் பாதுகாப்பினை வழங்காத ஒரு தரப்பினர் இருக்கும் அதேவேளை மறுபுறம் இதற்கு நேரடியாகப் பொறுப்புக் கூற வேண்டிய இன்னுமொரு தரப்பினரும் உள்ளனர்.

அது தொடர்பிலேயே குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

பாராளுமன்ற விசாரணைக் குழுவில் சஜித் தரப்பு எம்.பி.க்களும் அங்கத்துவம் வகித்தனர்.

அந்தச் சந்தர்ப்பங்களை விடுத்து இப்போது எதற்காகக் கூறுகின்றனர். இப்போது எதற்காக அரசாங்கத்திலுள்ள ஒருவரை இதனுடன் தொடர்புபடுத்த முயற்சிக்கின்றனர்? இந்தத் தாக்குதல்களின் உண்மையான சூத்திரதாரிகளை மறைக்க வேண்டிய தேவை ராஜபக்ஷர்களுக்கு மாத்திரமின்றி எதிர்க்கட்சிகளுக்கும் காணப்படுவதாகவே தெரிகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. எவ்வாறான தடைகள், இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான சூத்திரதாரிகளை வெளிப்படுத்தும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகாது என்றார்.

(ம-7)


## வேலையாட்கள் தேவை

புதுக்குடியிருப்பு மற்றும் வவுனியாவில் இயங்கிவரும் புடைவையகம் ஒன்றிற்கு salesல் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(1432)

**076 889 1308, 077 839 3974**


## கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30.08.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9:00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும். எமது பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் இந்நிகழ்வில் கலந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கும் வண்ணம் அன்புடன்வேண்டிக் கொள்கிறோம்

தகவல்:செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

(C-3637)


## கல்லீரல் தானதாரர்கள் தேவை
## உயிர் காக்கும் உதவி

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை. உங்கள் தன்னார்வ தானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

தகுதிகள்

- வயது: 20 - 50 வயது.
- எடை: 50 - 70 கிலோ.
- இரத்த வகை: O (ஓ) மட்டுமே.

மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (no alcohol).

முக்கியக் குறிப்பு: தானதாரராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே. தானதாரர்கள் (Donors) 3முதல் 6 வாரங்களில் முழுமையாக குணமடைவார்கள்.

(சம்பந்தப்பட்டவர்கள் மட்டும்தொடர்பு கொள்ளவும்)

(1434)

தொலைபேசி: **0703011765**

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள் உங்கள் முடிவு ஒருவரின் வாழ்க்கையை மாற்றியமைக்கும்.


## மன்னாரைச் சேர்ந்த இளம் யுவதி தமிழகத்தில்
### அகதியாகத் தஞ்சம்

மன்னாரைச் சேர்ந்த இளம் யுவதி தமிழகத்தில் அகதியாகத் தஞ்சமடைந்துள்ளார்.


மன்னாரில் இருந்து தனியொரு பெண் நேற்று அதிகாலை கடல் வழியாகப் படகு மூலம் சென்று தரையிறங்கி தமிழகத்தின் அரிச்சல் முனையில் தஞ்சம் அடைந்துள்ளார்.

மன்னார் மாவட்டம், தலைமன்னார் கிராமத்திலிருந்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் 2 இலட்சம் ரூபா பணம் கொடுத்து அரிச்சல் முனையை மேற்படி பெண் சென்றடைந்துள்ளார்.

(ம-7)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
20 - 07 - 1952



இறைவன் அடியில்
12 - 08 - 2025

### சிவஞானம் ரகுநாதன் (K.S.Ragu)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் ரகுநாதன் அவர்கள் (12.08.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் யாழ் மணிக்குரல், சாவகச்சேரி கவிஸ்ரன், யாழ் FM வானொலி சேவை என்பவற்றில் அறிவிப்பாளராகவும் போட்டோ ரகுப்பிரியா புகைப்பட கலையக உரிமையாளராகவும் துளிர்கள் நிறுவனத்தின் இயக்குநராகவும் இறுதியாக XPERT MEDICS நிறுவனத்தின் ஆலோசகராகவும் பல துறைகளில் சேவை புரிந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னம் தம்பதியரின் மூத்த மருமகனும், சுதர்ஜனாவின் (சுதா) அன்புக் கணவரும் ரகுசுதன், பிரியா, அனுப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பக்தகௌரி, காலஞ்சென்ற பகீரதன், தர்மசீலன் (கஜன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெய் சாய்நிகேதன் (சாய்), கிஷோதனன் (கிஷோத்), கவிலாஷி (கவிஷி) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பாலசரஸ்வதி, செல்வராணி, குணநாதன், காலஞ்சென்ற சிவலோகநாதன், சற்குணநாதன், சிவபாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராசரத்தினம், தவராஜசேகரம், ரத்தினசோதி, வவா, நிர்மலாதேவி (சுபா), குணரூபா ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மட்டுவில் தெற்கு சாவகச்சேரியிலுள்ள அவரின் தாயாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நெனியன் மயானத்திற்கு 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுதன் - 077 734 7397, பிரியா - 077 394 6232
அனு - 077 720 6568, கிஷோத் - 074 201 4819

(C-3638)

தகவல் :
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3640)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி தேவை

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் வடமராட்சி பகுதிகளில் 10 பரப்புக்கு மேலாக உள்ள காணிகள் தேவை. குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி விரும்பத்தக்கது.

தரகர் தேவையில்லை. காணி உரிமையாளர் தொடர்பு கொள்ளவும்

(5027)

**076 987 8617, 076 860 2770**

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3636)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

(C-3636)

0777-068-777
v2vacancies@gmail.com

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தேவை.

(5018)

**076 830 3931**

## வேலைவாய்ப்பு

நெல்லியடியில் புடவைக் கடைக்கு விற்பனைப் பெண்/ஆண் பணியாளர்கள் தேவை. வடமராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(1433)

**077 312 8378**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org